வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 19.1.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

விண்வெளித் துறையில் இந்தியா மகத்தான சாதனை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி, தனது 118-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் கூறி உள்ளார்.

விஜயவாடாவில் இன்று நடைபெற்ற தேசிய பேரிடர் மீட்பு படையின் 20-ஆவது நிறுவன தின கொண்டாட்டங்களில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கலந்து கொண்டார்.

டாவோசில் நாளை தொடங்க உள்ள உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் மத்திய தகவல் ஒலிபரப்பு, மின்னணு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் பங்கேற்கிறார்.

மலேசியாவில் நடைபெற்று வரும் 19-வயதிற்கு உட்பட்ட மகளிர் டி-20 கிரிக்கெட் போட்டிகளில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டிஸ் அணியை வென்றது.

*மன் கி பாத்*

விண்வெளித் துறையில் இந்தியா மகத்தான சாதனை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி, தெரிவித்துள்ளார். ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனில் இந்த ஆண்டின் முதல் நிகழ்ச்சியாக இன்று ஒலிபரப்பான

118-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களிடையே இன்று காலை உரையாற்றிய அவர் தொலைநோக்கு பார்வையுடன் எதிர்கால சவால்களை சமாளிக்கும் வகையில் இந்திய விஞ்ஞானிகள் பணியாற்றி வருவதாக கூறினார். விண்வெளியில் 2 செயற்கை கோள்களை இணைக்க கூடிய தொழில் நுட்பத்தைக் கொண்ட 4-ஆவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று குறிப்பிட்டார். இதற்காக அரும்பணியாற்றிய விஞ்ஞானிகளுக்கு அவர் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார். இஸ்ரோ விஞ்ஞானிகள் விண்வெளியில் விதைத்த கவ்பரி விதைகள் முளைவிட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர் விண்வெளியில் உற்பத்திக்கான புதிய தொழில் நுட்ப ஆராய்ச்சியில் சென்னை ஐஐடி-யின் எக்ஸ்டம் மையம் ஈடுபட்டுள்ளதாக எடுத்துரைத்தார். இதன் மூலம் ககன்யான் திட்டம் எதிர்கால விண்வெளி நிலைய உருவாக்கம் உள்ளிட்டவை வலுப்படும் என்றும் கூறினார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் பிறந்த நாளான வரும் 23-ஆம் தேதி பராக்கிரம தினமாக கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர் நேதாஜியின் துணிச்சல், தொலைநோக்கு பார்வை உள்ளிட்டவை இன்றளவும் நினைவு கூறப்படுவதாக தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் மேம்பாடு, சமூகசேவை போன்றவற்றில் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறிய பிரதமர் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள், முதியோர் சேவை, போதை பொருளுக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் செயல்படும் சமூக சேவையாளர்களுக்கு பாராட்டு தெரிவித்துக் கொண்டார். பழங்குடியினரை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தினார்.

பிரதமர் மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் அரசியலைப்பு சட்டத்தை உருவாக்கிய தலைவர்களுக்கு தமது சிரம் தாழ்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார். வரும் 26-ஆம் தேதி நாட்டின் 76-ஆவது குடியரசு தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில் குடியரசு தினத்திற்கு ஒருநாள் முன்னதாக தேசிய வாக்காளர் தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதே நாளில் உருவாக்கப்பட்ட இந்திய தேர்தல் ஆணையம் தனது செயல்பாடுகள் மூலம் நாட்டின் ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்தி உள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா சமத்தும் மற்றும் சகோதர துவத்தின் சங்கமமாக உள்ளது என்றும் அவர் கூறினார். பிரதமரின் மனதின் குரல் உரையின் தமிழாக்கம் இன்று இரவு 8 மணிக்கு புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களிலும் மறுஒலிபரப்பு செய்யப்படும்.

பிரதமரின் மன் கி பாத் உரையை மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் நீலகிரி மாவட்டம் மேட்டுப் பாளையத்தில் கட்சி தொண்டர்கள் மற்றும் பொது மக்களுடன் இணைந்து கேட்டார்.

ஸ்டார்ட்-அப் இண்டியா திட்டம் 10-ஆவது ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். பெருநகரங்களில் மட்டுமல்லாது சிறு-குறு நகரங்களிலும் இது விரிவு படுத்தப்பட்டுள்ளதாக கூறிய அவர் இதன் மூலம் இளைஞர்களிடையே புதுமை, படைப்பாற்றல், அர்ப்பணிப்புடன் கூடிய செயலாற்றல் உள்ளிட்டவை வளர்ந்து வருவதாக தெரிவித்தார்.

இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் நம்மைச் சுற்றி உள்ள விலங்குகள் மற்றும் பறவைகளுடன் ஒன்றிணைந்து வாழ கற்பிப்பதாக

எடுத்துறைத்த பிரதமர் சட்டீஸ்கர், மத்திய பிரதேசத்தில் புதிய புலிகள் காப்பகம் உருவாக்கப்பட்டுள்ளதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

*அமித் ஷா*

தேசிய பேரிடர் மீட்புப் படையின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இத்தினத்தை ஒட்டி, ஆந்திரப் பிரதேச மாநிலம் விஜயவாடாவில் இன்று நடைபெற்ற தேசிய பேரிடர் மீட்பு படையின் 20-ஆவது நிறுவன தின கொண்டாட்டங்களில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கலந்து கொண்டார். கிருஷ்ணா மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மை நிறுவனத்தில் தெற்கு வளாகத்தையும், விஜயவாடாவில் உள்ள 10-ஆவது பெட்டாலியன் வளாகம், திருப்பதியில் உள்ள பிராந்திய தடய அறிவியல் ஆய்வக கட்டிடம் உள்ளிட்டவற்றை காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். மேலும் கோரக்பூரில் பிராந்திய மீட்பு படை மையத்திற்கான அடிக்கல்லையும் அவர் நாட்டினார்.

இயற்கை பேரிடர் போன்ற இக்கட்டான தருணங்களில் தேசிய பேரிடர் மீட்புப் படையின் செயல்பாடுகள் மகத்தானது என்று சமூக ஊடகத்தில் அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் திரு அமித் ஷா கூறி உள்ளார். மக்களின் பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டு வரும் உறுதியான

நடவடிக்கைகளின் சின்னமாக தேசிய மீட்புப்படை திகழ்கிறது என்று புகழாரம் சூட்டி உள்ளார். மீட்பு பணிகளின் போது தங்களின் இன்னுயிரை தியாகம் செய்த வீரர்களுக்கு அமைச்சர் மதியாதை செய்துள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ்*

சுவிட்சர்லாந்து டாவோசில் நாளை தொடங்கி வரும் 24-ஆம் தேதி வரை நடைபெற உள்ள உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் மத்திய தகவல் ஒலிபரப்பு, மின்னணு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் பங்கேற்க உள்ளார். 5 நாட்கள் நடைபெறும் இக்கூட்டத்தில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, தொழில் நுட்பம், மின்னணு, உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

நாட்டின் பொருளாதார கொள்கைகள் மற்றும் மத்திய அரசு செயல்படுத்தி வரும் வளர்ச்சி திட்டங்கள் குறித்து உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருவதாக திரு அஸ்வினிவைஷ்ணவ் டாவோஸ் செல்வதற்கு முன்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். டிஜிட்டல் தொழில் நுட்ப முன்னேற்றம் அனைத்து மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் உள்ளது என்றும் இந்தியாவில் செயல்படுத்தப்பட்டு வரும் டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் மீது உலக நாடுகள் ஆர்வம் காட்டி

வருவதாகவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். டிஜிட்டல் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக எடுத்துரைக்க உள்ளதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

*கும்பமேளா*

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் கடந்த 13-ஆம் தேதி திங்கட்கிழமை தொடங்கி நடைபெற்று வரும் கும்பமேளாவில் அமைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் மகாகும்ப் அனுபவ அரங்கில் கும்பமேளாவின் வரலாறு பற்றி வீடியோ படக்காட்சி மூலம் விளக்கப்படுகிறது. இதுபற்றி எமது செய்தியாளர்..................

(வாய்ஸ்)

*வருங்கால வைப்பு நிதி*

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்குகளை, பணியாளர்கள் வேறு நிறுவனத்திற்கு மாற்றும் போது பழைய நிறுவன தலைவர்கள் மூலம் பரிமாற்றக் கோரிக்கைகளை அனுப்பும் நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாக இந்நிறுவனம் கூறி உள்ளது. இதன் மூலம் 3 லட்சத்து 90 ஆயிரம் உறுப்பினர்கள் பயன் பெறுவார்கள் என்பதோடு உறுப்பினர்களின் கோரிக்கைகள் உடனடியாக தீர்க்கப்பட்டு தரவு நிலைத் தன்மையை முறையாக உறுதி செய்ய முடியும்.

*குடியரசு தினம்*

புதுடெல்லியில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் பங்கேற்க நாடு முழுவதும் உள்ள தேசிய விருது பெற்ற கைவினைக் கலைஞர்களுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. அந்த வகையில், புதுச்சேரியைச் சேர்ந்த கைவினைக் கலைஞர்கள் இருவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குடியரசு தினவிழாவில் பங்கேற்க உள்ள ---------- சேர்ந்த கைவினைக் கலைஞர் திரு. வெங்கடேசன் எமது செய்தியாளரிடம் கூறுகையில்.....

(வாய்ஸ்)

*காரைக்கால்-கார்னிவெல்*

காரைக்கால் மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத் துறை, கலை பண்பாட்டுத் துறை, மற்றும் வேளாண் துறை இணைந்து ஏற்பாடு செய்திருந்த காரைக்கால் கார்னிவெல்- 2025 விழா கடந்த 16-ஆம் தேதி தொடங்கி இன்று நிறைவடைய இருந்த நிலையில் கனமழை காரணமாக இன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளது. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வரும் 26-ஆம் தேதி நடைபெற உள்ள குடியரசு தின விழாவில் வழங்கப்பட உள்ளதாகவும் மாவட்ட ஆட்சியர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைத் தேர்தல்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் 5-ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம் 17-ஆம் தேதியுடன் நிறைவு பெற்றது. தாக்கலான 65 வேட்பு மனுக்களில் 55 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. வேட்பு மனுக்களை திரும்ப பெற்றுக் கொள்ள நாளை கடைசி நாளாகும். இறுதி வேட்பாளர் பட்டியல் நாளை வெளியிடப்படுவதோடு வேட்பாளர்களுக்கான சின்னங்களும் ஒதுக்கப்படும். இதனிடையே ஈரோடு ரங்கம்பாளையத்தில் வாக்குச் சாவடி அலுவலர்களுக்கான முதல் கட்ட பயிற்சி இன்று நடைபெற்றதாக தேர்தல் நடத்தும் அலுவலர் திரு மணீஷ் தெரிவித்துள்ளார்.

கோ-கோ

உலக கோப்பை கோ-கோ பேட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன. புதுடெல்லியில் நடைபெற உள்ள மகளிர் இறுதி ஆட்டத்தில் இந்தியா-நேபாள அணிகள் விளையாடி வருகின்றன. ஆடவர் இறுதி ஆட்டத்திலும் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு 7.45 மணிக்கு தொடங்குகிறது.

கிரிக்கெட்

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் 19-வயதிற்கு உட்பட்டவர்களுக்கான மகளிர் டி-20 கிரிக்கெட் போட்டிகளில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டிஸ் அணியை

வென்றது. 45 ரன் என்ற வெற்றி இலக்குடன் களம் இறங்கிய இந்தியா 5-ஆவது ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 47 ரன் எடுத்து வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் இலங்கை அணி 139 ரன் வித்தியாசத்தில் மலேசிய அணியை தோற்கடித்தது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

விண்வெளித் துறையில் இந்தியா மகத்தான சாதனை படைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி, 118-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் கூறி உள்ளார்.

விஜயவாடாவில் இன்று நடைபெற்ற தேசிய பேரிடர் மீட்பு படையின் 20-ஆவது நிறுவன தின கொண்டாட்டங்களில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கலந்து கொண்டார்.

டாவோசில் நாளை தொடங்க உள்ள உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் மத்திய தகவல் ஒலிபரப்பு, மின்னணு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் பங்கேற்கிறார்.

மலேசியாவில் நடைபெற்று வரும் 19-வயதிற்கு உட்பட்ட மகளிர் டி-20 கிரிக்கெட் போட்டிகளில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டிஸ் அணியை வென்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.